THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, this suggestion has to be considered only when the country reaches the level where the economic take-off stage is arrived at.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, எவ்வளவுதான் பிரச்சாரம் செய்தாலும் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்றால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தை 30 ரூபாயிலிருந்து குறைந்தபட்சம் 100 ரூபாய்க்காவது உயர்த்தினால்தான் நல்லமுறையில் நடைபெறும் என்பதை உணர்ந்து அப்படிச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஒரு தேசியத் திட்டமாகும். அதில் இந்திய அரசு நாடு முழுவதும் ஏற்படுத்தியிருக்கும் ஒரு அடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அந்தந்த மாவட்டத்திலேயுள்ள வசதிகளுக்கேற்ப கிடைக்கின்ற நன்கொடைகளுக்கேற்ப சில வசதிகளை அதிகமாகச் செய்து வருகின்றது. இந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தை வலியுறுத்த வலியுறுத்த, இது தேசியக் கடமை, குடும்பக் கடமை என்ற உணர்ச்சி மக்களை விட்டு விலகி இது ஏதோ ரூபாய்க்காகச் செய்து கொள்ளக்கூடிய காரியம், வரவுக்காகச் செய்கிற காரியம் என்ற தவறான எண்ணத்தை ஒருவேளை வளர்த்திவிடுமோ என்று ஐயுறுகிறேன். இதிலே கிடைக்கும் உதவித் தொகையைவிட இதனால் கிடைக்கும் நன்மைகள், குடும்பத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் மிகப் பெரியவை என்பதை மக்கள் உணர வேண்டுமென்று நான் விழைகின்றேன்.

Tubectomy ward in Women and Children Hospital at Egmore.

* 452 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a tubectomy ward has been opened at the Government Hospital for Women and Children, Egmore, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) போஸ்ட்-மார்ட்டம் திட்டத்தின் ஒரு பகுதியான 20 படுக்கைகள் கொண்ட ட்யூபக்டமி பிரிவு 17-11-1971 அன்று திறந்து வைக்கப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, எழும்பூரிலுள்ள மகளிர்-சிறுவர் மருத்துவமனையில் மிக நெருக்கடியாக, அதாவது ஒரு நாளைக்குப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் செல்கின்றன. அவர்களை உடனடியாகக் கவனிப்பதற்கான வசதிகள் இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே அதை விரிவு படுத்த அரசு திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாகவே மருத்துவமனைகள் என்றால் மக்கள் கூட்டம் அதிகமாகிறது. ஆகவேதான் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தை வலியுறுத்தி இந்தக் குழந்தைகளினால் ஏற்படும் தொல்லை வீட்டுக்கும் வேண்டாம், நாட்டுக்கும் வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

வெள்ளக்கோவிலிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம்

* 453 வினா—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவிலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Government Hospital at Theni

* 454 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the hospital at Theni has been opened and is functioning;

(*b*) if so, whether there is a proposal to increase the number of doctors; and

(*c*) the steps proposed for expansion of the Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம். இத்திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

(உ) இல்லை.